ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது
අංක 2081/49 - 2018 ජූලි මස 26 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.07.26
*2081/49 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதி வியாழக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டம்**
**உணவுச் சாலைகள், உணவு வழங்கல் தொழிலுக்கான சம்பளச் சபை**

உணவுச் சாலைகள், உணவு வழங்கல் தொழிலுக்கான சம்பளச் சபையினால் (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் கௌரவ தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளவென அக் கட்டளைச்சட்டத்தின் 29(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத் தீர்மானங்கள் 2018 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**எஸ். ஏ. என். சரணதிஸ்ஸ,**
செயலாளர்,
தொழில் மற்றும் தொழிற்சங்க
உறவுகள் அமைச்சு.

தொழிற் திணைக்களம்,
கொழும்பு 05,
2018, யூலை 26.

**அட்டவணை**

உணவுச்சாலைகள், உணவுவழங்குதற் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு 1979 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27ஆந் திகதியன்று வெளிவந்த 34 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்புக்கான அட்டவணையில் தரப்பட்டு காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப் பட்டவாறாக 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதிய 1789/ 19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்மானியில் பிரசுரமாகிய அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிப்பிட்டுள்ள முடிபுகள் மேலும் பின்வருமாறு வேறுபடுத்தப்படுதல் வேண்டும். உணவுச்சாலைகள், உணவுவழங்குதற் தொழிலுக்கான I- ஆம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள வேலையாளர்களுக்கு ஏற்புடையனவாகவுள்ள நேரவேலைக்கான ஆகக்குறைந்த சம்பள வீதங்கள், II -ஆம் பாகத்திலுள்ள நேரொத்த பதிவில் தரப்பட்டுள்ள வீதங்களாயிருத்தல் வேண்டும்.

1A - PG 4144 - 202 (2018/07)
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk.எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**பாகம் I**

வேலையாளர் வகுப்பு

**தரம் I**

உதவி அறைப் பையன்கள், தரிக்குமிடப் பரிசாரர், தரிக்குமிடப் பென் உதவியாளர், படுக்கையறைத் தொழிலாளர்கள், சுத்தஞ்செய்வோர், ஓய்வறைக் தொழிலாளர்கள், படுக்கையறை (மலசலகூட) த் தொழிலாளர்கள், மலசலகூடத் தொழிலாளர்கள், அலுவலகப் பையன், அலுவலகத் தொழிலாளர்கள், பண்டகசாலைத் தொழிலாளர்கள், சைக்கிள் ஏவலாளர், சமையலறை சுத்தஞ் செய்வோர், சமையலறை உதவியாளர்கள், உண்கலம் கழுவுவோர், சமையலறைத் தொழிலாளர்கள், சுமையாள், போசனப் பதார்த்தசாலைப் பையன், உதவியாளர், கோப்பை அறைப் பையன், குவளை அறைப் பையன், மதுபானசாலைத் தொழிலாளர், பயன்பணி வேலையாளர்கள், தோட்டத் தொழிலாளர்கள்/உதவியாளர்கள், தோச்சியற்ற பராமரிப்பத் தொழிலாளர்கள்.

**தரம் II**

அறைப் பையன்கள், மனைப் பணியாட்கள், அறைப்பணிப்பெண், துணியறைப் பரிசாரர், அறைப்பெண் உதவியாளர், சேவகர்கள், தூதுப் பணியாட்கள், சரிபார்ப்போர், பணியறைப் பையன்கள், குற்றேவல் பையன், மின்தூக்கிப் பையன், வாயிலோன், பயணப்பொதி மின்தூக்கி இயக்குநர்கள், பயணிகள் மின்தூக்கி இயக்குநர்கள், உதவி உணவு பரிமாறுபவர், உதவி பண்டகசாலை மேலாள், பஸ்வண்டிப் பையன், உதவி மதுபானச் சாலையாளர், உதவி மதுபானச்சாலை பணியாளர், பிலியட்ஸ் மார்க்கர், நீச்சல்தடாக உயிர்க்காப்பாளர், சலவைச்சாலை உதவியாளர், தோட்டக் காரன், நீச்சல்தடாகப் பரிசாரர், ஒரளவு தேர்ச்சியுள்ள பராமரிப்புத் தொழிலாளர்.

**தரம் III**

தையற்பெண்கள் (சீம்ஸ்ட்ரெஸ்), தையற்காரர், உடம்புபிடிப்போர், எழுது வினைஞர் தரம் III, பண்டகசாலை உதவியாளர், சாரதிகள், மதுபானச்சாலைக் காசாளார்கள், சிட்டை எழுதுவினைஞர், பொது எழுதுவினைஞர் அந்தரங்க எழுதுவினைஞர், சிற்றுண்டிச்சாலைச் சமையற்காரர், தித்திப்புப் பண்டம் தயாரிப்பவர், உதவிச் சமையற்காரர், சமையலறை 3 ஆம் உதவியாளர், உதவி பாண் தயாரிப்பாளர், போசனப் பதார்த்தசாலையாளர், சமையற்காரர் தரம் III, உதவி மணித் தலைமையாள், மண்டபச் சுமையாள், உணவு பரிமாறுபவர், மதுபானச்சலைப் பணியாளர், பண்டசாலை மேலாள், மதுபானச்சாலைப் பரிமாறுநர், மதுபான பண்டசாலை மேலாள், பாதுகாப்புத், தொழிலாளர், காவலாளர் தலைமைத் தோட்டக்காரன், தேர்ச்சியுள்ள பராமரிப்புத் தொழிலாளர், மதுபானச்சாலையாளர்.

**தரம் IV**

சுதாதார களரி வரவேற்பாளர், எழுதுவினைஞர் தரம் II, உதவிப் பண்டசாலைப் பொறுப்பாளர், பண்டசாலை எழுதுவினைஞர், உதவி இரவுக் கணக்காய்வாளர், நேரம் குறிப்போர், காடெக்ஸ் உதவியாளர், கணக்கு எழுதுவினைஞர், உதவி கணக்கு பதியுநர், செலவின எழுதுவினைஞர், வரவு எழுதுவினைஞர், விற்பனைப் பேரேட்டு எழுதுவினைஞர், சம்பள எழுதுவினைஞர், தட்டெழுத்தாளர், காசாளர், பொது உதவியாளர்,தனியாள் உதவியாளர், உதவித் தலைமைச் சமையற்காரர், சமையலறை 2- ம் உதவியாளர், பாண் தயாரிப்பவர், பிரிவுச் தலைமச் சமையற்காரர், சமையற்காரர் தரம் III, தொலைபேசி இயக்குநர், வரவேற்பாளார், மணித்தலைமையாள், தலைமைச் சுமையாள், அறைச்சேவைக் கட்டளை பெறுவோர், உணவு மேடைப் பணியாள், தலைமை மதுபானச்சாலைப் பணியாள், தலைமை மதுபானச்சாலைப் பொறுப்பாளர், தலைமை உணவுபரிமாறுபவர், தலைமைப பண்டசாலை மேலாள், தலைமை, விருந்தோம்பற் பெண், தலைமைப் போசனப் பதார்த்த சாலையாளர், தேநீர் தயாரிப்பவர், பாதுகாப்புத் தலைவர், சிரேஷ்ட சலவைச்சாலை உதவியாளர்.

**தரம் V**

நிலமேற்பார்வையாளர், துணியறை மேற்பார்வையாளர், தாதிமார், உதவி மனைப் பொறுப்பாளர், எழுதுவினைஞர் தரம் I,பண்டகசாலைப் பொறுப்பாளர், தலைமைக் கணக்கு எழுதுவினைஞர், சிறாப்பர்,கணக்குப்பதிவாளர், இரவுக் கணக்காய்வாளர், வருமானக் கணக்காய் வாளர், சுருகெழுத்தாளர் பிரதான எழுதுவினைஞர், பிரதான காசாளர், கணக்காய்வாளர், கொள்வனவு உதவியாளர், பிரதான நேரம் குறிப்பவர், சமயலறை மேலாள், மேற்பார்வையாளர், சமலயறை 1-ம் உதவியாளர், தலைமைச் சமையற்காரர், மேல்நிலை சமையற்காரர், உண்டிச்சாலைச் சமயற்காரர், முன்னறை அலுவலக எழுதுவினைஞர், விமான நிலையப் பிரதிநிதி, தலைமை வரவேற்பாளர், பிரதான தொலைத் தட்டெழுத்து இயந்திர இயக்குநர், பிரதான தொலைபேசி இயக்குநர், ஓதுக்கீட்டு எழுதுவினைஞர், மேற்பார்வையாளர், குதிரையோட்டி முகாமையாளர், பாதுகாப்புப் பணிமுறை மாற்றத் தலைவர், தோட்ட மேற்பார்வையாளர், பொறியியல் பொறுப்புப் பணியாளர், நீச்சல் தடாக மேற்பார்வையாளர்கள்.

## அட்டவணை II

### ஒரு மாதத்திற்கான கீழெல்லைச் சம்பள வீதம்

| ஊழிய ஆண்டு | தரம் I<br>ரூ. ச. | தரம் II<br>ரூ. ச. | தரம் III<br>ரூ. ச. | தரம் IV<br>ரூ. ச. | தரம் V<br>ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 10,000.00 | 10,420.00 | 10,840.00 | 11,260.00 | 11,680.00 |
| 2 ஆம் ஆண்டு | 10,100.00 | 10,545.00 | 10,990.00 | 11,435.00 | 11,880.00 |
| 3 ஆம் ஆண்டு | 10,200.00 | 10,670.00 | 11,140.00 | 11,610.00 | 12,080.00 |
| 4 ஆம் ஆண்டு | 10,300.00 | 10,795.00 | 11,290.00 | 11,785.00 | 12,280.00 |
| 5 ஆம் ஆண்டு | 10,400.00 | 10,920.00 | 11,440.00 | 11,960.00 | 12,480.00 |
| 6 ஆம் ஆண்டு | 10,500.00 | 11,045.00 | 11,590.00 | 12,135.00 | 12,680.00 |
| 7 ஆம் ஆண்டு | 10,600.00 | 11,170.00 | 11,740.00 | 12,310.00 | 12,880.00 |
| 8 ஆம் ஆண்டு | 10,700.00 | 11,295.00 | 11,890.00 | 12,485.00 | 13,080.00 |
| 9 ஆம் ஆண்டு | 10,800.00 | 11,420.00 | 12,040.00 | 12,660.00 | 13,280.00 |
| 10 ஆம் ஆண்டு | 10,900.00 | 11,545.00 | 12,190.00 | 12,835.00 | 13,480.00 |

08 - 470

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.